Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 13-03-2026
Deposition of witness for : PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **கணேசன்** | **வயது** | : | 59 |
| **தந்தை பெயர்** | : | **ராமசாமி** | **தாலுக்கா** | : | **பூதலூர்** |
| **கிராமம்** | : | **செங்கிப்பட்டி** | **தொழில்** | : | **கிராம உதவியாளர்** |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 present. A 2,3 absent, 355 BNSS petition filed and allowed/**
Ld. D.**Counsel Present**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**:

1) **நான் தற்போது செங்கிப்பட்டி கிராம நிர்வாக அலுவலரின் கிராம உதவியாளராக உள்ளேன்.**

2) 26.2.2019 **அன்று காலை** 6.30 **மணியளவில் வல்லம் பேருந்து நிலையத்தில் இருந்து விஜயகாந்த் என்ற எதிரியை போலிசார் செங்கிப்பட்டி காவல்நிலையத்திற்கு போலீசார்**

அழைத்து வந்தபோது நானும் வி.ஏ.ஓ.வும் அங்கு இருந்தோம். அப்போது எதிரியை ஆய்வாளர் விசாரித்தார். அப்போது கம்பி, அலுமினியம், ஒயர் அங்கு இருந்தது. எதிரியிடம் விசாரித்து ஒரு வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடமும், வி.ஏ.ஓ விடமும் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்உ ள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும்.

3) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) எதிரி விஜயகாந்தை காவல்நிலையத்தில் வைத்துதான் விசாரித்தார்களா என்றால் ஆமாம். விஜயகாந்தை காவல்நிலையத்தில் தான் நான் பார்த்தேன். வேறு எங்கும் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2) போலிசார் எழுதிய வாக்குமூலத்தில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும்.

3) போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல

மறுவிசாரணை

இல்லை.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.13 19:04:23 +0530